**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 06.01.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 8 (LW8)

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாகுல் ஹமீது | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(2 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

(1 வது எதிரி இறந்துவிட்டார்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இராமநாதபுரம் ஆயுதப்படையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, தற்போது கமுதியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2011–2013 வரை பரமக்குடி நெடுஞ்சாலை ரோந்துப்பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தேன். சாட்சிகள் சார்பு ஆய்வாளர் பழனி, தலைமைக்காவலர்கள் அசோக்குமார், செந்தில்வேல், முத்தழகு, கோவிந்தன், முருகன், விஜயக்குமார், தெய்வேந்திரன், நீதி, நாகராஜன், காவல் ஆய்வாளர் சுபாஷ், சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார், தலைமைக்காவலர்கள் சுரேஷ், முத்துமணி, சார்பு ஆய்வாளர் நாகநாதன், சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்லமணி, காவல்

துணைக்கண்காணிப்பாளர் கணேசன் ஆகியோரை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும்.

நான் கடந்த 02.10.2012 ம் தேதி இரவு 08.00 மணி முதல் 03.10.2012 ம் தேதி காலை 08.00 மணி வரை பரமக்குடி நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் இரவுப்பணியில் இருந்தேன். பரமக்குடி பேருந்து நிலையம் அருகே 03.10.2012 ம் தேதி அதிகாலை 03.030 மணியளவில் ரோந்து பணியில் இருந்த பொழுது, பரமக்குடி குற்ற பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.முனியசாமி அவர்கள் கைபேசியில் தொடர்பு கொண்டு, "பரமக்குடி காந்திசிலை அருகில் Crime Accused என்னை அசால்ட் செய்து விட்டான், அவனை பிடித்து வைத்திருக்கிறேன், நீங்கள் உடனே புறப்பட்டு, காந்திசிலை அருகே வாருங்கள்" என்று கேட்டுக்கொண்டார். அன்றைய தினம் என்னுடன் இரு காவலர்கள் பணியில் இருந்தார்கள். அவர்களுடைய பெயர் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் வாகனத்துடன் பரமக்குடி காந்திசிலை அருகே சென்று பார்த்த பொழுது, சார்பு ஆய்வாளர் முனியசாமி, காவலர் ஞானசேகரன் ஆகியோர் ஒரு நபரை பிடித்து வைத்திருந்தனர். அவரைபற்றி சார்பு ஆய்வாளர் முனியசாமியிடம் விசாரித்த பொழுது, மதுரையை சேர்ந்த ராமானுஜம் மகன் வெங்கடேசன் என தெரிவித்தார். மேற்படி நபரை எங்களது வாகனத்தில் ஏற்றி பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் இறக்கிவிட சொன்னார்கள். ஆனால் நான் ரோந்துப்பணியில் இருந்ததால் மறுத்துவிட்டேன். நான் பார்த்த போது ராமனுஜம் மகன் வெங்கடேசன் என்பவர் நல்ல நிலையில் இருந்தார். பின்னர் சார்பு ஆய்வாளர் முனியசாமி அவர்கள் Crime வாகனம் வரும்வரை எங்கள் வாகனத்தில் வெங்கடேசனை ஏற்றி அமர வைத்திருக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி நான் வெங்கடேசனை எங்களது வாகனத்தில் ஏற்றி அமர வைத்துவிட்டேன். சற்று நேரத்தில் பரமக்குடி நகர் காவல் நிலைய ரோந்து அலுவலில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனி, காவலர்கள் முத்தழகு, செந்தில்வேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். பின்னர் 5 நிமிடத்திற்குள் பரமக்குடி குற்ற பிரிவு காவலர்கள் நீதி,

தெய்வேந்திரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பின்னர் சற்று நேரத்தில் க்ரைம் வாகனமான டெம்போ டிராவலரை அதன் ஓட்டுநரான அசோக் என்பவர் ஓட்டிவந்தார். மேற்படி வெங்கடேசனை எங்கள் வாகனத்திலிருந்து இறக்கி, க்ரைம் வாகனத்தில் செந்தில்வேல், தெய்வேந்திரன், நீதி ஆகியோர் ஏற்றி பரமக்குடி நகர் காவல் நிலையம் கொண்டு சென்றனர். எங்களது வண்டியில் வெங்கடேசன் 5 நிமிடம் இருந்த பொழுது, அவர் நல்ல நிலமையில்தான் இருந்தார். மேற்படி வெங்கடேசனை எங்களது வாகனத்திலிருந்து க்ரைம் வாகனத்திற்கு மாற்றும்பொழுதும் அவர் நல்ல நிலையில்தான் இருந்தார். பின்பு நாங்கள் தொடர் ரோந்துப்பணிக்கு சென்றுவிட்டோம். 03.10.2012 ம் தேதி காலை 08.00 மணி முதல் நான் ஓய்வில் இருந்துவிட்டு, அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு மீண்டும் ரோந்துப்பணிக்கு சென்றேன்.

பின்னர் 04.10.2012 ம் தேதி காலை 07.45 மணியளவில் பரமக்குடி துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வான்செய்தி மூலம் பரமக்குடி அரசு மருத்துவமனை அருகில் சாலை மறியல் நடக்கிறது, உடனேசென்று பார்க்கவும் என்று உத்தரவளித்தார்கள். அதன்படி நாங்கள் பரமக்குடி அரசு மருத்துவமனை சாலைக்கு சென்று, மறியல் செய்தவர்களிடம் விசாரித்தபோது முதல்நாள் இரவு பிடித்துவைத்திருந்த வெங்கடேசன் த/பெ.ராமானுஜம் என்ற நபரை எமனேஸ்வரம் காவல்நிலையத்தில் வைத்து, போலிசார் லத்தியால் அடித்ததில் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்று தெரிவித்தார்கள். இந்த வழக்கை சிபிசிஐடி பிரிவிற்கு மாற்றம் செய்ததாக கேள்விப்பட்டேன். சிபிசிஐடி காவல் ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .